1973 மார்ச் 28]

உடுக்குறியிடப்படாத வினாக்கள்.

" தமிழரசு. "

39. கே.—திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழரசு திங்களிருமுறை இதழில் பணிபுரியும் அலுவலர்களின் தகுதி, சம்பளம் ஆகிய விவரங்கள் என்ன ?

(இ) தமிழரசில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை எழுதுவோருக்கென மாதச் சம்பளமோ, அல்லது அவை ஒவ்வொன்றுக்கும் சன்மானம் போன்று பண உதவி ஏதேனும் தரப்படுகிறதா ?

(உ) ஆமெனில் உதவி தரும் குறைந்த பட்ச, உயர்ந்த பட்ச தொகை எவ்வளவு ?

(எ) தமிழரசு இதழ் 1 முடிந்து வருடத்தில் அதன் வரவு-செலவு என்ன ?

ப.—(அ) தமிழரசு இதழில் நிருபர், துணை ஆசிரியர், உதவி ஆசிரியர், ஓவியர்கள் போன்ற தொழில் நுணுக்க ஊழியர்களும் பிற துறைகளிலுள்ளது போன்ற ஊழியர்களாக உதவியாளர்கள், கணக்கர், எழுத்தர், கடைநிலை ஊழியர் உள்ளனர். அவர்களின் அடிப்படைச் சம்பளம் பின் வருமாறு :—

	ரூபாய்.
இணை ஆசிரியர்	550
துணை ஆசிரியர்	275
நிருபர்	350
உதவி ஆசிரியர்	425
ஓவியர்கள்	250
மேலாளர்	550
கணக்கர்	350
உதவியாளர்	275
இளநிலை உதவியாளர்	200
தட்டச்சர்	200

பிராட்மா இயக்குநர்	200
எழுத்தர்	140
கடைநிலை ஊழியர்	130

தொழில் நுணுக்கப் பிரிவினருக்கு வழக்கமான தகுதிகளுடன் நாளிதழ் ஏடுகளில் பணியாற்றிய அனுபவம் முதலியவைகளைத் தகுதியாக வைத்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

(இ) ஆம்.

(உ) அரசின் துறைகளின் திட்டங்கள் பற்றிய கட்டுரைகளை மாத ஊதியம் பெறும் அலுவலர்கள் தயாரிக்கின்றனர். கதை, கவிதை வெளியாரிடமிருந்து பெறப்படுகிறது. இதற்குத் தகுதிக்குத் தக்க குறைந்தது ரூ. 25 முதல் அதிகம் ரூ. 50 வரை தரப்படுகிறது.

(ஏ) வரவு: 1—7—1970 முதல் 30—11—1971 முடிய ரூ. 8,28,912·94.

செலவு: அரசு அச்சகத்தில் அச்சடிக்கப்படுவதால் இதற்கான திட்ட வட்டமான செலவு பற்றி கணக்கு எடுக்க தனியே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

40. கே.—திரு செ. முத்துசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்..

(அ) தமிழ் நாடு அரசு நடத்தும் 'தமிழரசு, மாதமிருமுறை' ஏட்டின் மூலம் 1971—72 வரை எவ்வளவு லாபம் ஈட்டியது?

(இ) லாபமில்லையெனில், நட்டமானல் எவ்வளவு?

(உ) நட்டமேற்பட்டதற்கான காரணமென்ன?

ப. (அ), (இ), (உ): அரசு நடத்தும் ஏடு லாப நஷ்டத்தைக் கருதி நடத்தப்படும் ஏடல்ல. அரசின் பல சாதனைகளையும் பற்றிய கட்டுரைகள், கவிதை, வெண்பாப் போட்டி போன்ற பல செய்திகளைத் திரட்டி குறைந்த விலையில் எல்லா தரப்பட்ட மக்களும் படித்து பயன்பெறும் நோக்கத்தோடு நடத்தப்படுவதாகும். இதற்கு முன் அரசால் நடத்தப் பட்ட மேழிச் செல்வம், சீரணி, பாக்கியலட்சுமி போன்ற இதழ்கள் குறைந்த விலையில் விற்கப்பட்டன. மேற்கண்ட ஏடுகள் லாப நஷ்டத் தைக் கருதி வெளியிடப்படவில்லை. உதாரணமாக ஆரோக்கிய மார்க்கம் எல்த் எஜுகேஷன் போன்ற இதழ்கள் அரசு செலவில் அச்சடிக்கப் பட்டு இலவசமாகவே வெளியிடப்பட்டுள்ளன. தற்போது மக்கள் நல் வாழ்வுத் துறையில் வெளியிடும் குடும்ப நல செய்திக் கதிர் என் னும் இதழ் மக்களுக்கு இலவசமாகவே வழங்கப்படுகிறது.

41 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased t state the cırculatıon figures of the Government Fortnightly "Tamil Arasu" for the years 1970-71, 1971-72 and 1973.

A.—List @ is placed on the table of the House.

@57-60-ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 28]

State Raffle.

42 *Q.*— Thiru G. SWAMINATHAN.—Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the number of First, Second and Third Prizes of the Raffle tickets which have not been awarded during the last 6 months after the draw ;

(*b*) the total amount so far not distributed ; and

(*c*) the reasons therefor ?

A.—(*a*) The number of I, II and III prices of the Raffle tickets which have not been awarded during last 6 months (up to 31st January 1972).—

Special Bumper—	I Prize	1
	I Prize	3
	II Prize	13
	III Prize	17

(*b*) Rs. 8,25,000.

(*c*) The claims along with Raffle tickets have not been presented by the prize winners, hence the prize amounts have lapsed to Government.

43 *Q.*—Thiru G. SWAMINATHAN.—Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether the Government are aware that some of the State Raffle Agents are engaged in converting Black money into White through purchase and sale of prize winning tickets ; and

(*b*) if so, the steps proposed to be taken by the Government to avert this anti-social act ?

A.—(*a*) No. This Government do not have any information in this matter except news item that appeared in the press.

(*b*) Does not arise.

44. Q.—Thiru G. SWAMINATHAN and Thiru V. ISVARMURTI—Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that some of the individuals have won more than 100 prizes in the State Raffles from the beginning ; and

(*b*) if so, the details thereof including the total amount won by each such individual in the aggregate on the different draws?

A.—(*a*) Yes. A very few individuals have won more than 100 prizes from the inception of the Tamil Nadu Raffle Scheme (i.e. from 15th August 1968).

(*b*) The particulars are furnished in the Annexure.@

45 *Q.*—THIRU G. SWAMINATHAN.—Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether it is a fact that complaints have been received by the Director of State Raffles during October 1971 that printed words including numbers on the Raffle Tickets faded out and disappeared in course of time ;

(*b*) if so, the reason for such occurrence ; and

(c) the action proposed to be taken by the Government in the matter ?

A.—(*a*) No.

(*b*) Does not arise.

(*c*) Does not arise.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) உடுக்குறியிடப்பட்ட வினாக்களுக்கு உடுக்குறியிடப்படாத வினாக்க ளாக விடைகள்.

3-40. பி. ப.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : உடுக்குறியிட்ட ஏழு வினாக்களுக்கு அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற விடைகள் 39 முதல் 45 வரை உள்ள உடுக்குறியிடப்படாத வினாக்களுக்குரிய விடைகளாக இன்று மேலவை முன்னர் வைக்கப்படுகின்றன என்று நான் அறிவிக்கிறேன்.

(2) அவைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்

MR. CHAIRMAN : I have to inform the House that the following six candidates have been validly nominated for election to the House Committee for the financial year 1973–74 :—

(1) THIRU R. KRISHNASWAMY NAIDU,

(2) THIRU T. V. MUTHUKRISHNAN,

@61-ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது